திரு. எஸ். கணேசன் : சினிமாத்தொழில் பயிற்சிக் கல்விக் கூடத்தில் ஆண்டுதோறும் எவ்வளவு மாணவர்கள் ஒவ்வொரு துறையிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு மாத்திரம் பயிற்சிக்கு 82 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 1960-இல் இருந்து பத்து அல்லது பதினைந்து பேர்களுக்குத்தான் பட்டம் வழங்குகிற நிலை இருந்தது.

Special Officers for Tamil development

* 217 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there are proposals under the consideration of the Government to appoint special officers for the development of Tamil in districts ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வுத் தனி அலுவலர் ஒருவர் உள்ளார். அவர் ஆட்சி மொழிச் சட்டத்தை மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்கள் யாவற்றிலும் துரிதமாகச் செயல்படுத்துவதை அழுத்தமுற ஆய்வு செய்யும் பணியைச் செய்கின்றார். மேலும் 9 ஆய்வுத் தனி அலுவலர்களை மாவட்டங்களில் நியமித்து ஆட்சி மொழிச் சட்டச் செயலாக்கத்தை விரைவுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

கயத்தாறு, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள டிராக்டர்கள்

* 218 *வினா.*—திரு. எம் முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கயத்தாறு, ஒட்டப்பிடாரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்களின் பராமரிப்புக்காக 1970–71-ம் ஆண்டில் செலவான தொகை எவ்வளவு ?

(இ) மேற்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்கள் மூலம் 1970–71-ம் ஆண்டில் வரவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

	பராமரிப்புக்காக செலவு.
(அ) (1) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம்.	ரூ. 5,101-75
(2) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்.	ரூ. 11,945-00
	வரவு.
(இ) (1) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம்.	ரூ. 3,376-00
(2) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்.	ரூ. 8,339-00

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, தனியார் வைத்திருக்கும் டிராக்டர்கள் மூலம் லாபம் கிடைக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களில் வருமானத்தைவிட செலவுதான் அதிகமாக இருக்கிறதே, இதைப்பற்றி அரசு ஆராயுமா ?

TRUTH ALONE TRIUMPHS

1971 டிசம்பர் 10]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செலவைக் காட்டிலும் வருமானம் பெருகவேண்டும் என்கிற அடிப்படையில்தான் செயல் படவேண்டும். ஆனால் இங்கே செலவைக் காட்டிலும் வருமானம் குறைவாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டு ஆராய்ந்து வருமானத்தைப் பெருக்கு வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

Municipalities of Tirunelveli, etc.

* 219 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to integrate the municipalities, viz., Tirunelveli, Palayamkottai and Melapalayam to form a Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. டி. கணபதி : இந்த மூன்று நகராட்சிகளும் சேர்ந்தாற்போல இருப் பதனால் பொதுமக்களுடைய சௌகரியம், ஒருமைப்பாடு இவற்றைக் கருதி இந்த மூன்றையும் ஒரு மாநகராட்சியாக மாற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட கோரிக்கையை அந்த மூன்று நகராட்சிகளும் தெரிவிக்கவேண்டும். பொதுமக்களும் விரும்ப வேண்டும். அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் அந்த மூன்று நகராட்சிகளிடம் இருந்து வரவில்லை. தனித்தனியாக இயங்கி, தங்கள் தங்கள் பணிகளையே சிறப்பாக ஆற்ற அவை விரும்புகின்றன. அவர்கள் அதுபோன்ற ஒரு கோரிக் கையை அனுப்பிவைத்தால் அரசு அதற்குப் பிறகு ஆராய்ந்து நிதி வசதி இருக்கின்றதா என்று பார்க்கலாம்.

Sri Subramaniaswami Arts College

* 220 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal under the consideration of the Government to take up the work of constructing pucca buildings for the Sri Subramaniaswami Arts College, Tiruttani, this year?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரி கட்டுவதற்கு இடம் இன்னும் ஒதுக்கப்படவில்லை. இடவசதி செய்து தரப்பட்ட பின்பு கட்டிடங் கள் கட்டுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, தியாகராய கல்லூரி முதல்வர் திரு. ராஜகோபால் நாயுடு அவர்கள் எந்த இடத்தில் கட்டிடம் கட்டலாம் என் பதற்கான அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டார்களா ? எப்போது அந்த வேலை துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன்: சுப்பிரமணிய தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கான நிலத்தைக் கொடுப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்னும் நிலம் ஒப்படைக்கவில்லை. நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தான் கட்டிடம் கட்டுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.